1989 மே 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அது பற்றிக் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 237 மற்றும் 238 மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு.

239—(*வினா எண். 159) திரு. கே. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தனியாக ஏற்படுத்தவும், கோபால்ட் சிகிச்சையளிக்க கருவிகள் வாங்கவும் அரசு அனுமதித்துள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: (அ) மற்றும் (ஆ): கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவுக்காக தனியாக கோபால்ட் சிகிச்சை அளிக்கக் கருவிகள் வாங்க அரசு அனுமதித்துள்ளது. இப்பிரிவிற்கான கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு கே. ரமணி: தலைவரவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்று நோய்க்கான உயர்ந்தபட்ச சிகிச்சை, கோபால்ட் ட்ரீட்மெண்ட் கொடுக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்யவேண்டுமென்று சில ஆண்டுகளாகவே அந்தக் கோரிக்கை முன்வைத்து கேட்கப்பட்டுள்ளது. அரசு அதை சாங்ஷன் செய்திருப்பதாக முன்னேகூடச் சொல்லப்பட்டது. இந்தக்கருவிகளை வாங்க அவ்வளவு பெரிய கஷ்டம் இராது. இந்தக் கருவிகளுக்கு என்ன செலவாகும்? எவ்வளவு பணம் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது? ஒரு டைம் நிர்ணயித்து, அதற்குள்ளாக அதை நிறைவேற்ற அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, இந்த கோபால்ட் தெராபி சிகிச்சைப் பிரிவிற்கான கட்டிடம் கட்டுவதற்கு முதலில் 15 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. பிறகு அது போதாது என்று அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு, அதைத் திருத்தி, 21 லட்சமாக அனுமதிக்கப்பட்டது. இப்பொழுது கட்டிடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி 1989-ல் முடிவடையும். அந்தப் பணி முடிவடைந்த பிறகுதான், பாபா அணு சக்தி நிலையத்துடன் தொடர்பு கொண்டு, அவர்களுடைய ஆதரவோடு அதற்கான கருவிகளைப் பொருத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. கட்டிட வேலைகள் முடிந்த பிறகுதான் கருவிகள் வாங்கும் வேலை தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இன்னொரு விஷயத்தை இது பற்றிக் கொண்டுவர விரும்புகிறேன். கட்டிட வேலை தாமதப்படுவது என்பது வருஷக் கணக்காக நடைபெறுகிறது அந்த ஆஸ்பத்திரியில். அனேகமாக மற்ற இடங்களிலும் இப்படித்தான் இருக்கும் இதை ஏற்கெனவே இந்த மன்றத்திலே நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். பி. டபிள்யூ. டி. துறையில் இருக்கிறவர்கள், மெடிக்கல் டிபார்ட்மெண்ட் சம்பந்தப்பட்ட வரையிலும், எந்தப் பிடிப்பும் அவர்கள் பேரில் இவர்களுக்குக் கிடையாது. அவர்கள் வைத்ததுதான் சட்டம். ஆகவே உடனடியாக நமது அரசு இதில் தலையிட்டு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக இந்தக் கட்டிடம் முடிவு அடைய வேண்டுமென்பதற்கான நடவடிக்கை எடுத்து, இந்த வருஷம் முடிவடைவதற்குள், இந்தக் கருவியை வாங்கி அங்கே புற்று நோய் சிகிச்சை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இங்கே பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். இது போன்ற பல்வேறு பணிகள் இப்போது வேகமாக முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. இந்தப் பணி, கட்டிடப்பணி, டிசம்பர் 1989-க்குள் முடிவடையுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஜெயங்கொண்டத்திலிருந்து சவூதி அரேபியாவிற்குச் சென்றவர்கள் 12 பேரில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து உறுப்பினர் அவர்கள் உட்காரலாம். வினா கோயம்புத்தூரைப் பொறுத்தது.

1989 மே 11]

திரு. எம். முத்தையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தின் மூலமாக புற்றுநோய் சம்பந்தமாக மருத்துவமனை திறந்து அதற்கான நடவடிக்கைகளில் அரசு இறங்கியிருக்கிறது. சித்த மருத்துவ முறைக்கு அரசு ஊக்க மளித்து உதவிகள் செய்தால் நன்றாக இருக்கும். சித்த மருத்துவ முறை தமிழகத்தில் தற்போது மங்கி மறைந்து போயிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அவர்கள் சித்த மருத்துவ முறைக்கு சிறந்த ஊக்கமளித்தார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவோடு தொடர்பு உடையதா ?

திரு. எம். முத்தையன் : எனவே அதை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையில் தொடர்ச்சியான காரியங்களில் நம்முடைய அரசு ஈடுபட்டால் சித்த மருத்துவ முறை வளரும் என்பதால் அரசு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அரசு இது குறித்து பரிசீலிக்கும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பற்றாக்குறையின் காரணமாக இந்த கோபால்ட் சிகிச்சைக்காக இராமநாதபுரம் மாவட்டத்தின் மக்கள், சென்னைக்கு வந்து சிகிச்சை பெறுகிறார்கள். இதைப் போக்க, மதுரையிலேயே மேலும் கோபால்ட் சிகிச்சைப் பிரிவு அதிகரிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, அது குறித்து அரசிடம் திட்டமேதுமில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்றுநோய்ச் சிகிச்சைக்காக கோபால்ட் எக்ஸ்ரே என்கிற கதிரியக்க சிகிச்சை அளிப்பதற்கு விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திறமையில் நாங்கள் ரொம்பவும் நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஆனால் பல ஆண்டுக் காலமாக கோவை மருத்துவ மனையில்—ஒரு பெரிய தொழில் கேந்திரமான நகரில் உள்ள அந்த மருத்துவ மனையில்—அந்தப் புற்றுநோய்க்கான சிகிச்சை அளிக்கும்

கோபால்ட்—எக்ஸ்—ரே சாதனம் அமைக்கப்படாமல் இருக்கிறது. இதை ஏதோ பக்ரா—நங்கல் திட்டத்தைப்போல் ஒரு பெரிய டெக்னிகல் அட்வைஸ் வாங்கித்தான் செய்யவேண்டும் என்பதைப் போல் இப்படி காலத்தை நீட்டித்துக்கொண்டே போவது சரியானதல்ல. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு காலக்கெடுவை திட்டவட்டமாக நிர்ணயித்து—உடனடியாக இந்த சிகிச்சை சாதனத்தை கோவை நகர மக்களும், மாவட்ட மக்களும் பெறவும்—சென்னைக்கும் வேறு பல இடங்களுக்கும் இதுவரை சென்று புற்றுநோய் சிகிச்சைக்காக அவதிப்பட்ட தொல்லைகளிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு அதற்கு ஒரு உத்தரவு போடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலேயே குறிப்பிட்டேன். டிசம்பர் 1989-க்குள் கட்டிட வேலை முடிந்துவிடும் என்று கால வரையறையைக் குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயமாக அதை விரைவுபடுத்தி செயல்படுத்துவதற்கான ஆணைகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு நகரத்தில் பாதாள சாக்கடை.

240—(*வினா எண். 267) **திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரத்தில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை நகரத்து மக்கள் காலையில் அருகில் அமைந்திருக்கிற டயர் பேக்டரியின் நாற்றத்தையும் மாலையில் பக்கத்தில் அமைந்திருக்கிற சாராய பேக்டரியின் நாற்றத்தையும் அனுபவித்து மிகுந்த தொல்லைக்கு உள்ளாகி இருக்கிறார்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS